[திரு. மு. அரங்கநாதன்]   [1978 மார்ச் 7

அவர்களுக்குள்ளே அடிதடி ஏற்பட்டு அந்த இரண்டு சாராய விற்பனைக் கோஷ்டி சண்டைகளின் காரணமாக பொதுமக்கள் பாதிக்கப்படக்கூடிய நிலைமை ஏற்பட்டு இரவு 1-30 மணிக்கு என் வீட்டிற்கு ஓடி வந்தார்கள், அதற்குப் பிறகு நான் அவர்களை காவல் நிலையத்திற்கு அனுப்பி வைத்தேன், காவல் துறையினரும் அவர்களுக்குப் பாதுகாப்பு தரவேண்டுமென்று சொன்னேன். இதிலே சம்பந்தமில்லாதவர்கள் இணைக்கப்பட்டிருக்கிறார்கள். சம்பந்தப்பட்டவர்கள்மீது வழக்குத் தொடர்வதில் எனக்கு ஆட்சேபனையில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வி கேளுங்கள், பதிலுரை சொல்லக்கூடாது.

திரு. மு. அரங்கநாதன்: ஆனால் தொடர்ந்து லாயிட்ஸ் சாலை பக்கம் சாராயத் தொல்லைகள் இருந்து வருகின்றன, அமைச்சர் அவர்கள் கவனித்து நடவடிக்கை எடுப்பார்களா?

(முற்பகல் 10-30)

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: ஏற்கனவே எனது அறிக்கையில் அதை நான் தெளிவுபடுத்தியிருக்கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து: தலைவரவர்களே, நேற்றைய தினம் 42-வது விதியின்கீழ் ஒரு நோட்டீஸ் கொடுத்தேன். அதை சட்டை செய்யாத காரணத்தால். . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தாங்கள் கொடுத்தேன் என்று சொன்னது, ஆய்வில் இருக்கிறது. எனவே அதைப் பற்றி பேரவைத் தலைவருடைய அறையில் வந்து கேட்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(2) தகவல் கோரல் (தொடர்ச்சி)

(ஆ) 42-வது விதியின் கீழ் கொடுத்த அறிவிப்பு குறித்து

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவரவர்களே, ஒரு முக்கியமான பிரச்னையைப்பற்றி 42-வது விதியின்கீழ் ஒரு தீர்மானம் கொடுத்திருந்தேன், மானியம் வரும்பொழுது அதைப்பற்றிப் பேசிக் கொள்ளலாம் என்று பதில் கொடுத்து எனக்குத் தபால் எழுதப்

பட்டிருக்கிறது. மானியம் வரும்வரையில் காத்துக்கொண்டிருக்க வேண்டிய நிலையிருந்தால் 42-இன்கீழ் கொடுத்திருக்கமாட்டேன். அவசரமும், அவசியமும் இருக்கிறது என்பதால்தான் 42-வது விதியின்கீழ் கொடுக்கிறேனே தவிர, மானியம் வருகிறபொழுது பேசிக்கொள்ளலாம் என்றால், அதுவரையில் காத்துக்கொண்டிருக்கக்கூடிய பிரச்னை இல்லை இது. எனவே இப்படிப்பட்ட பதிலைக் கொடுத்து திருப்பி அனுப்ப வேண்டாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் 42-வது விதியின்கீழே கொடுக்கும்பொழுது, பேரவைத் தலைவர் அதன் முக்கியத்துவத்தைப் பொறுத்து பதில் எழுதுவதற்கு உரிமையிருக்கிறது. ஆகவே, அந்த விதத்தில் முடித்து வைத்திருக்கிறார்கள். ஆகவே, தயவு செய்து அதை விட்டுவிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: எங்களுக்கு அதனால் உரிமையில்லாமல் போகிறது. எங்களுடைய உரிமையை நிலைநாட்ட முடியாமல் போகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்களுக்கு உள்ள உரிமையைப் போல் அவருக்கும் உரிமை இருக்கிறது.

திரு. எம். ஏ. லத்தீப்: என்னுடைய உரிமை போகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்களுக்குள்ள உரிமையை ஒட்டி நீங்கள் கொடுக்கிறீர்கள். அவருடைய உரிமையையொட்டி, அதை நிராகரிப்பது அல்லது ஏற்றுக்கொள்வது என்று முடிவு செய்கிறார்.

திரு. எம். ஏ. லத்தீப்: அவசியம், அவசரம் என்பதால்தான் கொடுக்கிறோம். காரணம் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதை அறையிலே அவருடன் டிஸ்கஸ் செய்யுங்கள்.

திரு. மு. அரங்கநாதன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, அதைப்போலவே. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 42-வது விதியின்கீழ் கொடுத்துள்ளதுதானே, அது ஆய்வில் இருக்கிறது. அதைப் பற்றி அறையிலே வந்து கேளுங்கள்.

திரு. மு. அரங்கநாதன் : சென்னை நகரத்திலே காலரா நோய் பரவுவது குறித்து. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவுசெய்து உட்காருங்கள்.

(4) 1978-79 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்.

(அ) கோரிக்கை எண். 22—கால்நடை வளர்ப்பு.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன் :—

"மானியக் கோரிக்கை எண். 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின்கீழ் ரூ. 11,87,59,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

திரு. த. வேணுகோபால் : தலைவரவர்களே, கால்நடை வளர்ப்பை அபிவிருத்தி செய்யும் வகையில் தகுதிக்கேற்ப அரசாங்கத்தில் கடன் வழங்க வேண்டும் என்பதைப் பற்றி விவாதிக்க—

"மானிய கோரிக்கை எண். 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 11,87,59,000-இல ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.